SRI N. MARUDACHALAM : சைக்கிள் வரியை எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பும்போது, அதன் மூலம் ஏற்கெனவே வந்து கொண்டிருந்த தொகையைச் சரிக்கட்டுவதற்கான உத்தேசங்களையும் தெரிவித்துத்தான் அனுமதி கோருவார்கள். கோவை முனிசிபாலிடியிலே சைக்கிள் வரியை ரத்து செய்யவும், அதை ஈடு செய்ய வேறு வரி போடவும் அனுமதி கோரி சர்க்காருக்குத் தீர்மானம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே சைக்கிள் வரியை ரத்து செய்ய ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கோவையிலிருந்து அம்மாதிரி தீர்மானம் இன்னும் இங்கு வரவில்லை.

SRI V. SUBBIAH : நகரசபை ஏரியாக்களில் மட்டுமல்லாமல் மேஜர் பஞ்சாயத்துக்களிலும், மைனர் பஞ்சாயத்துக்களிலும்கூட இம்மாதிரி சைக்கிள் வரியை எடுத்துவிடவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களா? அப்படியானால் எத்தனை பஞ்சாயத்துக்களிலிருந்து அம்மாதிரித் தீர்மானங்கள் வந்திருக்கின்றன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இக் கேள்வி, "1960-இல் எத்தனை நகர மன்றங்கள் சைக்கிள் வரியை ரத்து செய்ய அரசாங்க அனுமதியைக் கோரின?" என்பது. ஆகையால், நகர மன்றங்கள் பற்றிய பதிலைத் தயாரித்திருக்கிறேன். பஞ்சாயத்துக்களைப்பற்றித் தகவல் வேண்டுமானால், வேறு கேள்வி கேட்கவேண்டும்.

SRI S. M. ANNAMALAI : சைக்கிள் வரியை ரத்து செய்வதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை அந்தந்த நகராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்வதாயிருந்தால், சர்க்கார் அனுமதி தருமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அநேகமாக நகராட்சிமன்றங்களின் வருமானம் குறைவாக இருக்கிறது. செலவினங்கள் அதிகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால், இருக்கிற வரியை எடுத்துவிட்டு இன்னொரு வரியைப் போடுவதைவிட, இருப்பதை வைத்துக்கொள்வதே நலம் என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER : The Hon. the Minister for Works is not in Madras. I will take up his question No. 97 on his return.

Auctioning of bamboo coups.

*98. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விட்டுவந்த மூங்கில் காடுகளை ஆண்டிற்கு ஒரு முறை ஏலம் விடக் காரணம் என்ன?

11th August 1960]

(ஆ) இதனால் காடுகள் அழிக்கப்படுகின்றன என்பது உண்மையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) A paper[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், ஆண்டுக்கு ஆண்டு ஏலம் விடுவதால் சர்க்காருக்கு அதிக வருமானம் வருகிறபடியால், அப்படி ஏலம் விடப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆண்டுக்கு ஆண்டு ஏலம் விடுவதால் ஒரு வருஷ வளர்ச்சியடைந்த பிஞ்சு மரங்களை, பிற கூப்புகளுக்கும் சென்று வெட்டிவிடுகிறார்கள். அதனால், மூங்கில் காடுகள் அழிந்துகொண்டுவருவதால், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விடுகிற முறையை மறுபடியும் சர்க்கார் கொண்டு வரமுடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதெல்லாம் அனுபவத்திலே பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதிலே வருமானம் அதிகம் வருவது மட்டுமல்ல ; மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை ஏலத்திற்கு விட்டால், பெரிய கண்டிராக்டர்கள்தான் பணம் அதிகம் கட்டி, ஏலம் எடுக்க முடிகிறது. ஒவ்வொரு வருஷமும் ஏலத்திற்கு விட்டால் சாதாரண சிறிய கண்டிராக்டர்களும் ஏலம் எடுக்க முடிகிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகத்தான் அம்மாதிரி செய்யப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : வருஷத்திற்கு ஒரு முறை ஏலம் விடுவதினால் அவர்கள் போட்டா போட்டியில் அதிகமான தொகைக்கு ஏலத்திற்கு எடுத்துவிடுகிறார்கள். நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், பிற கூப்புகளில் சென்று பிஞ்சு மூங்கில்களை வெட்டுகிறார்கள். பிஞ்சு மூங்கில்கள் வெட்டப்படாமல் அவைகளைப் பாதுகாப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மற்ற கூப்புகளில் சென்று எடுக்காமலிருக்க அரசாங்கம் கூடுமானவரையில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளும்.

Purchase of ' Dead Stock ' by the District Agricultural Officers

*99 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா விவசாய இலாகா அதிகாரிகளின் வரம்புக்குட்பட்டு " Dead Stock " சாமான்கள் வாங்குவதானால், எவ்வளவு வரை வாங்கலாம் ?

(ஆ) இது எப்போது எந்த ஆண்டில் போடப்பட்ட அதிகாரம் ?

---

a Printed as appendix on page 470 infra.